பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 05 2026 SUNDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. தமிழக முதலமைச்சராக திரு. ஜோசப் விஜய் இன்று பதவியேற்றார். அவருடன் 9 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.
2. மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் பிஜேபிக்கு கிடைத்துள்ள வெற்றி, மத்திய அரசின் திட்டங்கள்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிபடுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. தாய்மொழியுடன் பிற மாநில மொழிகளை மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு கோடை கால சிறப்பு பயிற்சி முகாம்கள் நாடுமுழுவதும் நடத்தப்படும் என்று மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.
4. ஜம்மு கஷ்மீரில் போதைப்பொருள் தடுப்புக்கான 100 நாள் விழிப்புணர்வு இயக்கத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.
5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<<

தமிழக முதலமைச்சராக திரு. ஜோசப் விஜய், இன்று பதவியேற்றார்.

ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவருக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புறுதியையும் செய்து வைத்தார்.

(சவுண்ட் பைட் – விஜய் பதவியேற்பு 15 செகண்ட்ஸ்)

த.வெ.க அமைச்சரவையில் பங்கேற்கும் 9 அமைச்சர்களுக்கும் ஆளுநர் பதவிப்பிரமாணமும். ரகசிய காப்புறுதியையும் செய்து வைத்தார்.

*புதிய அமைச்சரவையில் திரு. N. ஆனந்த், திரு. ஆதவ் அர்ஜுனா, டாக்டர் கே.ஜி. அருண்ராஜ், திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. P. வெங்கடரமணன், திரு. ஆர். நிர்மல் குமார், திரு. ராஜ்மோகன், டாக்டர். T.K. பிரபு, செல்வி எஸ். கீர்த்தனா ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.*

*பதவியேற்றுக் கொண்ட பின், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் 3 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார்.*

*ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருமாதங்களுக்கு 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் வழங்குவதற்கான கோப்பிலும், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை மற்றும் போதைப்பொருள் தடுப்பு சிறப்புப்படை அமைப்பதற்கான கோப்புகளிலும் முதலமைச்சர் கையெழுத்திட்டார்.*

*பின்னர் உரையாற்றிய திரு. ஜோசப் விஜய், மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க தமது தலைமையிலான அரசு முன்னுரிமை அளிக்கும் என்று தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட – விஜய் 38 செகண்ட்ஸ்)*

*தமது கட்சி ஆட்சியமைக்க உதவிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் தலைவர்களுக்கு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் நன்றி தெரிவித்துக் கொண்டார்.*

*புதிய அரசு பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் திரு. பேபி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் திரு. D. ராஜா, விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.*

இந்நிலையில், தமிழக சட்டப்பேரவை கூட்டம் நாளை நடைபெறுகிறது.

காலை ஒன்பதரை மணிக்கு தொடங்கும் பேரவைக் கூட்டத்தில், தற்காலிக சட்டப்பேரவைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கருப்பையா, சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

சட்டப்பேரவை உறுப்பினர்களின் பதவியேற்புக்குப் பின், த.வெ.க தலைமையிலான புதிய அரசிற்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

வரும் 13-ம் தேதிக்குள் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு. ஜோசப் விஜய்க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழக அரசு மேற்கொள்ளும் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<<

மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் பிஜேபிக்கு கிடைத்துள்ள வெற்றி, மத்திய அரசின் திட்டங்களின் மீதான மக்களின் நம்பிக்கையை வெளிபடுத்தும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பெங்களூருவில் இன்று பிஜேபி தொண்டர்களிடையே உரையாற்றிய அவர், புதிதாக மாநிலங்களில் பொறுப்பேற்றுள்ள பிஜேபி தலைமையிலான அரசுகள், சிறப்பான அரசு

நிர்வாகத்தையும், பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவும், பொருளாதார வளர்ச்சியிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு மேற்குவங்கத்தில் பிஜேபி *10* இடங்களை மட்டுமே பெற்றதாகவும், தற்போது கட்சியின் மீது நம்பிக்கை அதிகரிததால், மாபெரும் வெற்றியை பெற முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் *3*வது முறையாக பிஜேபிக்கு மக்கள் வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

கேரளா மாநில சட்டப்பேரவை தேர்தல்களிலும் கடந்த தேர்தலை விட *3* இடங்கள் கூடுதலாக பெற்றுள்ளது மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக பிரதமர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி, மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவிற்கு எதிராக வாக்களித்து, அவர்களுக்கு துரோகம் இழைத்துவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அமெரிக்க - ஈரான் போர்ச் சூழல் காரணமாக, உலக அரசியலில் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு நாட்டு மக்கள், மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து வாழும் கலை பயிற்சி மையத்தின் *45*வது ஆண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, சர்வதேச பயிற்சி மையத்தையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<<

தாய்மொழியுடன் இதர மாநில மொழிகளையும் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு கோடைகால பயிற்சி முகாம்கள் நாடுமுழுவதும் நடத்த மத்திய கல்வி அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெறும் இந்த முகாம்களில் வேற்று மாநில மொழிகளை மாணவர்கள் கற்றுக் கொள்ளவும், சொற்களை அமைக்கவும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயிற்சி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் இந்திய சைகை மொழியையும் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த திட்டத்தை மத்திய கல்வி அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<<<

வெப்ப அலை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் இயற்கை பேரிடர் குறித்த முன்கூட்டிய அறிவிப்பை வெளியிடுவதற்கான அமைப்புகள் மீட்புப் பணிகள், பல்வேறு முகமைகளுக்கு இடையே

*ஒருங்கிணைந்த செயல்பாடுகள், உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*நதிநீர் மேலாண்மை, முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் வானிலை முன்னறிவிப்பு குறித்த அறிவியல்பூர்வ மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*>>>>><<<<<<*

*ஜம்மு கஷ்மீரில் போதைப்பொருள் தடுப்புக்கான 100 நாள் விழிப்புணர்வு இயக்கத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக யூனியன் பிரதேச அரசு தெரிவித்துள்ளது.*

*போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ், 646 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதுவரை 123 போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.*

*அரசு துறைகள், சமுதாய அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவை இணைந்து, இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.*

*>>>>><<<<<<*

*நாகாலாந்தில் மத ரீதியான மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை பொதுவெளியில் வைப்பதற்கு அம்மாநில அரசு தடை விதித்துள்ளது.*

*இதுதொடர்பாக அம்மாநில அரசு பிறப்பித்துள்ள உத்தரவில், தனியார் மற்றும் பொதுப்போக்குவரத்து வாகனங்களில் இதுபோன்ற விளம்பரங்கள் இடம்பெறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

மோட்டார் வாகன சட்டப்படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் அடிப்படையில் விளம்பரங்களை அகற்றாத தனிநபர் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நாகாலாந்து அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

>>>>><<<<<<<

ஜனநாயகத்தை வலுப்படுத்த ஒவ்வொரு வாக்காளரும் தனது வாக்குரிமையை தவறாமல் பயன்படுத்த வேண்டும் என்று தலைமைத்தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்குவங்கம், கேரளா, அஸ்ஸாம், தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்கள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக திருப்பதி சென்றுள்ள திரு. Gyanesh Kumar, இன்று காலை திருமலை திருப்பதி ஸ்ரீவெங்கடேஷ்வரா கோவிலில் வழிபாடு செய்தார்.

>>>>><<<<<<<

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், யுக்ரைன் உடனான நிரந்தர அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட பின்னரே அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே ரஷ்யாவின் செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற வெற்றி தின அணிவகுப்பை ஒட்டி மூன்று நாட்களுக்கு போர்நிறுத்தம் செய்வதென இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

>>>>><<<<<<

குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் இரண்டு நாட்களுக்கு அனல் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இரவு நேரங்களில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்பமான சூழல் நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு வெப்பநிலை படிப்படியாக உயரக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி, காரைக்கால், மாஹே உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள், அந்தமான் நிகோபார் தீவுகள், ஆந்திரா மற்றும் மேற்குவங்கத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில், இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் கேரள அணி - மொஹமதன் அணியையும், இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில், சென்னை அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும் எதிர்கொள்கின்றன

>>>>><<<<<<